Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | STC 186/2020 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | Pw 6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | தலைமை காவலர் 1170 முஜீத் |
| Father's Name | -- | அபுபக்கர் |
| Village | -- | ஆழியார் நகர் |
| Taluk | -- | ஆனைமலை |
| Caste | -- | -- |
| Calling | -- | தலைமை காவலர் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையம் |
| Religion | -- | முஸ்லீம் |
| Age | -- | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 24th February 2023.

**எதிரி ஆஜர் இல்லை குவிசபிரிவு 317 பிரிவின் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பொள்ளாச்சி நகர கிழக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன், கடந்த 23-2-2020 ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் நிலைய எழுத்தராக இருந்தபோது காலை சுமார் 8 மணி அளவில் சிறுவர் பூங்காவிற்கு சேர்ந்த வாதியானவர் உதவி ஆய்வாளர் திரு உதயசூரியனிடம் புகார் மனு சமர்ப்பித்தார். அந்த

புகாரின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் உதயசூரியன் வால்பாறை காவல் நிலைய குற்ற எண் 51/2020 சட்டப்பரிவு 294(பி) 506 (1) ஐபிசி வழக்கு பதிவு செய்து இந்த வழக்கு சம்பந்தமாக காவலர் சுமார் 9.30 மணிக்கு வால்பாறை மார்க்கெட்டுக்கு சென்று சம்பவ இடத்தை பார்வையட்டு மீண்டும் காலை 11.35 மணிக்கு காவல் நிலையம் வந்தார். அப்போது இந்த வழக்கு சம்பந்தமாக எதிரியான பிரபு மற்றும் அவருடன் இரண்டு நபர்கள் காவல் நிலையம் வந்தார்கள் இவ்வழக்கின் எதிரியான பிரபு காவல் நிலையத்தில் இருக்கையில் அமர்ந்து இருந்த உதவி ஆய்வாளர் உதயசூரியன் என்பவரிடம் என்மீது யாரும் புகார் கொடுத்தாலும் எதுவும் கேட்காமல் FIR போட்டுடுவாயடா என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டே வெளியே சென்றார். உடனே உதவி ஆய்வாளர் காவல் நிலையத்தில் பிரவுவிடம் சென்று எதற்காக என்னை திட்டிகிறார் என்று கேட்டார். அப்படித்தாண்ட திட்டுடுவேன் என்மீது ஏன் வழக்கு பதிவு செய்தாய் என்று தகாத வார்த்தைகளால் திட்டியும் உதவி ஆய்வாளர் வலது கையில் பிரபு என்பவர் கையால் குத்தியும், கீழே தள்ளிவிட்டார். கீழே விழந்தவுடன் அவர்மார்பில் காலை வைத்துக்கொண்டு கையால் முகத்தில் குத்தினார், அவர் குத்தியதில் உதவி ஆய்வாளர் உதய சூரியனுக்கு மூக்கில் ரத்த காயம் ஏறபட்டுவிட்து. அந்த சத்தம் கேட்டவுடன் காவல் நிலையத்தில் இருந்த நானும் நிலைய பாரப்பணியில் இருந்த பெண் காவலர் 917 கலை என்பவரும் பின்னர் காவலில் இருந்த 2170 சுரேஷ்பாபு என்பவரும் உதவி ஆய்வாளரை காப்பாற்றி சண்டையை விலக்கிவிட்டோம். பின்னர் பிரபு எங்கள்மூன்று பேரையும் பார்த்து யூனிப்பாம்போட்டவர்களை யாரையாவது கொன்றால்தான் எங்களைப் பார்த்தால் பயம் வரும் என்று சொன்னார் உடனே பிரவுவை பிடிக்க முயன்றபோது அவர் தப்பித்து ஓடினார் அந்த காவல் நிலையத்தில் நுழை வாயில் இருந்த செல்வகணேச்ன் மற்றும் மணிகண்டன் பிரபுவை பிடிக்க முயற்சி செய்தார்கள் அவர்களை தள்ளிவிட்டு அ்ங்கு இருந்து சென்றுவிட்டார். பின்னர் புகார் கொடுக்கவந்த மூன்றுபேரும் உதவி ஆய்வாளர் உதயசூரியனை காப்பாற்றி அவர்கள் உதவியுடன் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தனர். அங்கு அவர் கிசிக்கை அளிக்கப்பட்டு மதியம் சுமார் 13.35 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்திற்கு வந்து நடந்த பிரச்சனை சம்பந்தமாக சிறப்பு உதவி ஆய்வளார் திரு.குமரேசன் என்பவரிடம் புகார் கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் வால்பாறை காவல் நிலைய குற்றஎண் 52/2020 சட்டப்பிரிவு 294(ப) 323 353 506 (1) ஐபிசி வழக்கு பதிவு செய்தார் பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்அந்த பார்வை மகஜரில் சாட்சிகளாக நானும் காவலர் 2170 சுரேஷ்பாபு என்பவரும் கையொப்பம் செய்தோம்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த அன்று காலை 7 மணிக்கு ஆஜர் பட்டியலுக்கு வந்துவிட்டேன். சம்பவம் 11.50 மணிக்கு நடந்தது. குற்ற எண் 51/2020 குறித்து கேட்பதற்காக பிரபும் மற்றும் 1 ஆண் 1 பெண் நிலையம் வந்தார்கள். அதில் அந்த பெண்ணின் பெயர் ராணி ஆகும். அந்த ஆண் பெயர் தற்போது ஞாபம் இல்லை. மேற்படி மூவரையும் உதவி ஆய்வாளர் உதயசூரியன் விசாரித்தார். உதவி ஆய்வாளர்மேற்படி நபர்களிடம் எதற்காக தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தீர்கள்என்று கேட்டார். அதை நான் பார்த்தேன். எழுத்தரின் அறையும் உதவி ஆய்வாளர் அறையும் அருகருகே உள்ளன இரண்டும் மேற்கு பார்த்து அமரந்துள்ளன எதிரி உதவி ஆய்வாளரை தாக்கியதை நான் நேரில் பார்த்தேன். வால்பாறை காவல் நிலையத்தில் சிசிடிவி கேமரா எந்த வருடத்தில் பொருத்தப்பட்டுள்ள்து என்ற நினைவு இல்லை. மேற்படி சம்பவம் சிசிடிவி கேமராவில் பதிந்துள்ளதா என்று தெரியவில்லை. அந்த சிசிடி பதிவுகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக என்று தெரியவில்லை. எதிரி தாக்கியதும் உதவி ஆய்வாளர் மயக்கம் அடைந்தாரா என்றால் இல்லை. குற்ற எண் 51/2020 தில் உள்ள வாதியும் இன்னும் 2 நபர்களும் உதவி ஆய்வாளரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் மேற்படி நபர்களின் பெயர்கள் தற்போது நினைவு இல்லை. காவலர்கள் உள்ள காவல் நிலையத்தில் எதிரி உதவி ஆய்வாளரை தாக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் மேலதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மேலதிகாரி கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் கிசிக்கை பெற்று அன்றே பணிக்கு சென்று விட்டார். எதிரி குற்றம் சம்பவம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

District Munsif cum Judicial Magistrate, Valparai

(ஒப்பம்) திரு. M.A. சுவேதாரண்யன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை